# இலக்கியங்களில் இந்திரன் குறித்த தொன்மமும் தொன்ம உருவாக்கமும்

*ம.முத்துமீனா*
*ஆய்வியல் நிறைஞர்*
*சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

புராதன காலமனிதன் தன்னால் கட்டுப்படுத்த இயலாத இயற்கை ஆற்றலைக் கண்டு அச்சம் கொண்டான். ஆகையால் அவ்வியற்கைப் பொருள்களுக்கு உருவம் கொடுத்தும், கதை கூறியும் வழிபட்டான். இவ்வழிபாடு நடப்பியல் அற்புதநவற்சியாக மாறி, இயற்கையிகந்த கூறுகளைப்பெற்று, சமய நம்பிக்கையில் கால்கொண்டு, சடங்கு முறைகளில் வெளிப்பட்டு உருவாக்கப்பட்டதே தொன்மம் (ஆலவா) ஆகும். தொன்மம் ஒரு சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றது. தொன்மங்களில்தான் ஒரு சமூகத்தின் கடந்தகால வாழ்வு அனுபவங்களையும், விபரீதங்களையும், முரண்பாடுகளையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இச்செயல்பாடுகளை ஒருங்கிணைத்து ஒருவித குறியீட்டு ஒழுங்குகளுக்குள் அடுக்கிவைத்துக் கொண்டுள்ளது. இந்த ஒழுங்கமைவு கால ஓட்டத்தில் அதன் அர்த்தப் பொருண்மைகளைப் பூடகமானதாகவும், புரிந்து கொள்வதற்கு அப்பாற்பட்டதாகவும் மாற்றிவிட்டு இருக்கிறது. அத்தொன்மம் காலமாற்றத்திற்கு ஏற்ப சமூக, சமய, அரசியல் மாற்றங்களால் மாற்றம் பெற்றன. கால வளர்ச்சியில் புதுத்தொன்மங்களும், தொன்மக்கலப்புகளும் உருவாயின. இத்தொன்மங்கள் பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கொண்டு சமூகத்தினை பிரதிபலிக்கின்றன.

**தொன்மம்**

மித்து(ஆலவா) என்ற சொல் முதோஸ் (Muthos) என்ற கிரேக்கச் சொல்லின் வழிபட்டது. இதற்கான பொருள் கதை வாயினால் உரைக்கப்படுவது. இச்சொல்லை முதன்முதலில் எடுத்தாண்ட அறிஞர் பிளோட்டோ ‘முத்தோலோஜியா’ (Muthologia) என்பதற்கு ‘கதை கூறுதல்’ என்று பொருள் கொண்டார். ஆங்கிலத்தில் ‘மிதாலஜி’ (Mythology) என்பது புராணக்கதை, பொருளமைதி, வகைமையெனப் பல்வேறு பொருளைத் தருகின்றது. பண்பாடுகளுக்கேற்ப இம்மித்தின் வகை வேறுபடுகின்றன.

பண்பாட்டு வளர்ச்சியில் ‘பழங்கதைகளாகவும்’ (Legend) ‘நாட்டுப்புறக்கதைகளாகவும்’ (Folktale) வழங்கப்படுகின்றன. ஆலவான் தோற்றத்தை ஆராய்ந்தால் பழங்கதை, நாட்டுப்புறக்கதையாக முடிவடைகின்றது.

வடமொழியில் ‘புராணம்’ என்பது மித்தை குறிக்கும் சொல். இது பழங்கதை என்று பொருள்படும். வடமொழி புராணங்கள் அனைத்தும் இறைவனிடம் இருந்து தோன்றியவை என முனிவா;களால் சொல்லப்படுகிறது. இப்புராணங்களில் இறைவன் குறித்தத் தொன்மங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றது. தொல்காப்பியர் குறிப்பிடும் ‘உரை’ என்பது கதைகளைக் குறிக்கும்.

**பொருளோடு புணராப் பொய்ம்மொழியானும்**
**பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் (தொல். 1429)**

என்ற நூற்பாவின் ‘உரை’ என்பதை கதையாகக் கொண்டு புத்திலக்கியங்களில் வளர்ச்சிக்கு வித்திடுகின்றார்.

**ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே**
**ஒன்றே யார்க்கும் உரைநிலை இன்றே” (தொல். 1431)**

என்ற நூற்பா செவிலியானவள் தலைவிக்குக் கதை கூறும் தன்மையை விளக்குகின்றது. அந்த வகையில் முதோஸ் என்னும் கிரேக்கச்சொல் ‘உரைக்கப்படுவது’ அல்லது ‘கதை கூறுவது’ என பொருள்தந்ததைப் போலவே இங்கும் ‘உரை’ என்ற சொல் ‘உரைக்கப்படுவது’ ‘கதை கூறுதல்’ என்ற

பொருளில் உணர்த்தப்படுவதோடு பொருத்தமாகவும் உள்ளது. வனப்புகள் எட்டனுள் 'தொன்மை' என்பது 'புராணம்' என்ற வடசொல் போன்ற பொருளமைதியுடையதாய் இருக்கின்றது.

**தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே (தொல்.செய்யுள்.538)**

என்ற நூற்பாவில் 'உரை' என்பதற்கு கதை எனப்பொருள் கொண்டால் பொருத்தமாக இருக்குமென இளம்பூரணர் கூறுகிறார். பேராசிரியர் 'பழமையவாகிய கதைப்பொருள்களால் செய்யப்படுவது' என்கிறார்.

'மித்து' என்பதைத் தமிழில் 'தொன்மை' என்றே குறிக்கலாம். தொல்காப்பியர் எண்வகை வனப்புகளில் தொன்மையை ஒன்றாக்கி தம் நுண்ணறிவு மூலம் தம் உள்ளத்தை மகிழ்விக்கின்றார்.

மேலை நாட்டார் அரிஸ்டாட்டில் தம் பாட்டில் (Poeties) முதன் முதலாக (Myth) பற்றி விளக்கியிருக்கிறார். தமிழிலும் பல இலக்கியக் கொள்கைகளை உருப்படுத்தித் தோற்றுவாய் செய்து வைத்த தொல்காப்பியரே தொன்மத்திற்கும் வழிகாட்டியாக விளங்குகின்றார்.

க.பஞ்சாங்கம் தொன்மம் குறித்து கூறும்போது 'தொன்மங்கள் உயிர் பொருளாக விளங்குகின்றன. சமூகத்துடன் துடிப்புள்ள உயிர்தொடர்பு கொண்டு விளங்குகின்றன. சமூகத்தின் ஒவ்வொரு நுண்கூறுகளுக்குள்ளும் நுழைந்து ஊடுருவி செல்கின்றன" என்ற கருத்தை முன்வைக்கின்றார்.

தொன்மக்கதைகள் மரபுக்கும் சமூக செயல்பாடுகளுக்கும் இடையே பல்வேறு விளக்கங்களை தோற்றுவிக்கின்றன. தொன்மங்கள் எவராலும் அறிய முடியாத நிலையில் பூா;வீகக் குடியின் அறிவுத்தேட்டமும், உணர்வுகளும், நினைவுகளும், புதையுண்டும், மடிந்தும், உறைந்தும் கிடைக்கின்ற பகுத்தறிய முடியாத தன்மைகளைக் கொண்டது. பல்வேறு செயல்பாட்டுத் திரட்சியுடன் பண்பாட்டு மொழிபுகளாக உருவாகின்றன. சடங்குகள், குறியீடுகளாகத், தொல்குடி சமூகங்களின் எச்சங்களாக, மூடுண்ட தன்மைகளைச் சிதைப்பதாக இனத்தின் வழியாக ஏதோஒரு வடிவத்தில் தொன்மங்கள் உருவாகின்றன. இத்தொன்மங்கள் பலவித மூடுதிரைகளை விலக்கி சமூக விதியைத் தகர்க்கக்கூடியதாகவும், மீறக்கூடியதாகவும் தன்னை மாற்றிக்கொள்கின்றது.

**தொன்மம் பண்பும் பயனும்**

தொன்மம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. ஆனால் உள்ளுணா;வால் அமைவது. அறிவியல், வரலாற்றியல்படி மெய்ம்மை அன்று உளவியல், சமூகவியல் அடிப்படையில் உண்மையை விட ஒரு படி மேலானதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இலக்கியக்கொள்கை என்ற நூலில் 'தொன்மம் என்பதற்குக் "கவிதையைப் போல ஒரு வகையான உண்மை அல்லது உண்மைக்குச் சமமானது. ஆனால் வரலாற்று அல்லது அறிவியல் உண்மைக்குப் போட்டியாய் அமைவதன்று. அவற்றிற்கு நிறைவு தரும் இணைப்பாக அமைவது" என ரெனிவெலாக் விளக்கம் தருகின்றார்.

புராணமரபுக் கதைகளடங்கிய இத்தொன்மம் சமயம், நாட்டுப்புற இலக்கியம், மானிடவியல், வரலாறு, சமூகவியல், உளவியற்பகுப்பாய்வு, நுண்கலைகள் ஆகியவற்றுடன் இயைபுடையதாகும். சமயம் சாா;ந்த தொன்மம் தத்துவ விளக்கத்திற்குப் பயன்படுவதால் மிக இன்றியமையாதது. நாட்டுப்புறத்தொன்மம் வீரஉணர்வு, அற்புதநவிற்சியை அடிப்படையாகக் கொண்டது. விளையாட்டாய், கேளிக்கையாய் அமைவது. எல்லாக்கதைகளும் கடவுள்களை ஒட்டியே அமைந்தனவல்ல, மக்களையொட்டி அமைந்துள்ளன. தொன்மங்கள் புராணக்கதை வடிவங்களில் உலகச்சமுதாயங்களில் வேருன்றி நிலைத்துவிட்டன.

சமுதாய மக்களின் சார்பினை, விளைவை வெளிப்படுத்தும் தொன்ம இலக்கியம் மனித இனப்பண்பாட்டு வரலாறு அல்லது உள்ளுணர்வு வரலாறு (Cultural History of Spiritual History of Mankind) என சிலர் போற்றுவர். நாட்டுப்புறக்கதைகளிடையே கரு ஒற்றுமை, அமைப்பு ஒற்றுமை, கருத்தொற்றுமை பல காணப்படுகின்றன. தொன்மம் என்பது உலகப்பொதுவானது (Universal) என ஒப்பிட்டு ஆராய்ந்தோர் முடிவு கூறுகின்றனர்.

**இலக்கியங்களில் இந்திரன்**

இந்திரன் குறித்த தொன்மம் ஆய்வுக்குட்பட்டது. வேதங்களில் உயர்வாக போற்றப்பட்ட இந்திரன், பின்னாளில் இழிவான நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளான். இரட்டைக் காப்பியங்களில் 'இந்திரவிழா' சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளன. பின்னாளில் அதற்கான குறிப்புகள் இலக்கியப் பதிவுகளில் இடம் பெறவில்லை. அவ்வகையில் 'இந்திரன்' குறித்த தொன்மமானது ஒரு சீரற்ற நிலையில் காணப்படுகிறது. இந்திரன் குறித்த தொன்மப்பதிவினை இலக்கியங்களிலும், பிற சமய வேதங்களிலும் எவ்வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதை சமூக அரசியல் பின்னணியில் ஆராய்வது அவசியமாகின்றது.

**ரிக்வேதத்தில் இந்திரன்**

இந்து சமயத்தின் அடிப்படையான வேதங்களுள் ரிக்வேதம் தலைமையானது. நான்கு வேதங்களுள் பழமையானது ரிக்வேதம். இந்திரன் இந்துக்களின் மிகப்பழைய வேதங்களில் தலைமைக் கடவுளாகப் போற்றப்படுபவன். அத்தகைய சிறப்பான நிலையில் போற்றப்பட்ட இந்திரன் குறித்து ஆராய்வது அவசியமாகின்றது. அதற்கு சிறந்த ஆதாரமாக அமைவது ரிக்வேதம். ரிக்வேதத்தில் இந்திரன் பற்றிய குறிப்புகளைக் காணும் போது பல போர்களை நடத்தி வெற்றிகண்டவனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளான். அதிலும் குறிப்பாக சம்பரன், விருத்ரன், பத்து மன்னர்களுடனும் போர் நடைபெற்ற குறிப்புகள் புலப்படுத்தப்படுகின்றது. சம்பரன் மலைவாழ் இனக்குழுவினைச் சேர்ந்தவன். அவ்இனக்குழுக்கள் ஆரியர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதில் முனைப்புடன் இருந்தனர். இவர்கள் கருநிறம் கொண்டவர்கள். இவ்விரு இனக்குழுக்களுக்கிடையே நடந்த போரில் இந்திரன் ஆரிய இனக்குழுவிற்கு வெற்றி தேடித்தந்தான் என்பதை 'இந்தக் கருப்பு தாசர்களை இந்திரன் அழித்தான்" (2-20-7), 'இந்திரன் கருநிறம் கொண்டவர்களைக் கொன்றான்" (1-130-8), 'இந்திரன் ஐம்பதாயிரம் கருப்பர்களைக் கொன்றான். அவர்களின் கோட்டைகளை அழித்தான்" (6-31-9) போன்ற குறிப்புகள் ரிக்வேதத்தில் காணக் கிடைக்கின்றன.

விருத்ரன் என்னும் பாம்புடன் நடந்த போரினைக் குறிக்கும் போது 'அவன் தண்ணீரால் சூழப்பட்ட விருத்ரனைத் தாக்கினான்" (6-2-2), 'அந்தக் கொடிய விலங்கு தண்ணீரைச் சூழ்ந்து கொண்டது. தண்ணீரின் மேல் விழுந்த அக்கொடிய விலங்கை அவன் அழித்தான்(5-30-6). தண்ணீரில் மறைந்து கொண்டு தண்ணீருக்கும், வானத்திற்கும் தீங்கு செய்த பாம்பை அவன் கொன்றான். ஒரு மரத்தைச் சுற்றியிருப்பது போல தண்ணீரைச் சூழ்ந்திருந்த விருத்ரனைத் தாக்கினான். இந்திரன் நீர் நிலைகளை பாதுகாப்பவனாகவும், அத்தண்ணீர் வெளியேற்றத்தைத் தடுத்த விருத்ரன் என்ற பாம்பை அழித்த குறிப்புகள் வேதத்தில் உள்ளன. டி.டி.கோசாம்பி 'இக்குறிப்புகள் யாவும் அணையொன்று உடைக்கப்பட்டதைத்தான் புலப்படுத்துகின்றன என்றும், சிறந்த மொழியில் அறிஞர் விரித்ரா என்ற சொல்லுக்கு 'அடைப்பு' அல்லது 'தடை' என்ற பொருளைத்தான் கற்பிக்கின்றனரேயன்றி அசுரன் என்றல்ல" என்றும் குறிப்பிடுகிறார். (பண்டைய இந்தியா, ப.142) வேதங்களில் இந்திரன் முதன்மையான கடவுளாகவும், தலைசிறந்தவனாகவும், ஆரிய இனக்குழுக்குத் தலைமையேற்று தலைவனாகவும் இருந்திருக்க வேண்டும்.

**பௌத்த மதத்தில் வஜ்ரபாணி**

இந்திரன் வைதீக மதத்தில் மட்டுமின்றி பௌத்தம், சமணம் ஆகிய மதங்களில் தொடா;புடைய கடவுளாக இருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர். அந்த வகையில் பௌத்த மதத்தின் மகாயானப் பிரிவில் 'வஜ்ரபாணி' என்னும் கடவுள் குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. இத்தெய்வம் புத்தருடன் இருக்கும் சிறு தெய்வமாகவே காட்சியளிக்கின்றான்.

புத்தர் கபிலவஸ்துவிலிருந்து திரும்பிய பொழுது வஜ்ரபாணி என்னும் இக்கடவுள் தன்னை எட்டு தேவர்களுடன் பெருக்கிக்கொண்டு அவரைக்காத்தார் என பௌத்தமதப்பதிவுகள் கூறுகின்றன. புத்தனின் இறப்பைக் குறிக்கும் சப்பானிய ஓவியம் வஜ்ரபாணி எனும் கடவுள் சிவப்பு நிறத்தில் காணப்படுவதாகவும், வஜ்ரதாரா எனும் மற்றொரு கடவுள் கையில் வஜ்ராயுதம் ஏந்தியிருப்பதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. மகாயான பௌத்த மதத்தின் இருபெரும் பிரிவுகளை சார்ந்தவர்களும் வஜ்ரதாரா

என்னும் கடவுளை ஆதிபுத்தராக வணங்குகின்றனர் என்ற குறிப்பும் குறிப்பிடத்தக்கது. இக்குறிப்பினைக் காணும்போது இந்திரனின் ஆயுதமான வஜ்ராயுதத்தைக் கூறி இருப்பதால் பௌத்தமதத்தில் குறிப்பிடப்படும் இந்த வஜ்ரபாணி இந்திரனாக இருக்க வேண்டும்.

வஜ்ரபாணி குறித்த பழங்கதையொன்று பௌத்த மதத்தில் கூறப்படுகின்றது. ஒரு சமயம் பௌத்தர்கள் அனைவரும் மேருமலையில் கூடி அமிர்தத்தைப்பற்றியும் அதனைக் கடலின் அடியிலிருந்து மேருமலையைக் கொண்டு கடைந்து எடுப்பது குறித்தும் முடிவு செய்தனர். அவ்வாறே அமிர்தத்தை எடுத்தனர். அமிர்தத்தை பாதுகாக்கும் பணி வஜ்ரபாணியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அமிர்தத்தை வஜ்ரபாணியிடம் இருந்து 'ராகு' திருடிக்கொண்டது. அதற்காக போரும் நடைபெற்றது. அப்போரில் ராகு வெற்றி பெறவே பௌத்தர்கள் வஜ்ரபாணியை ஆலகால விஷத்தை அருந்தக் கூறி தண்டித்தனர். அவனும் விஷத்தை அருந்தி கருநீல நிறமானான். இக்கதை அமிர்தத்தைக் காக்கும் வஜ்ரபாணியின் கதையாகும். இக்கதையானது சைவசமய சிவனின் புராணக்கதையோடு ஒத்துச் செல்கின்றது.

வஜ்ரபாணி ஓவியம் சிலவிடங்களில் (திபெத்) சிவனின் தோற்றம் போல் ஒத்துள்ளது. இந்திரன் வேதங்கள் மட்டும் அல்லது பிற மதங்களிலும் தலைவனாகக் காட்சியளிக்கின்றான். இன்றளவும் பௌத்தமதம் பரவியுள்ள நாடுகளில் இந்திரவிழா கொண்டாடப்படுகின்றது. இதிலிருந்து பௌத்த மதத்தில் இந்திரனின் சிறப்பை அறியமுடிகின்றது.

**சங்க இலக்கியத்தில் இந்திரன்**

தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்கான கடவுளைக் கூறும்போது 'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' என மருதநிலத் தெய்வமாக வேந்தனைக் குறிப்பிடுகின்றார். உரையாசிரியர்கள் 'வேந்தன்' என்பதற்கு 'இந்திரன்' என பொருள் கொண்டுள்ளனர்.

சங்க இலக்கியத்தில் முதன்மைக் கடவுளாக வேந்தன், இந்திரன் பற்றிய குறிப்புகள் இல்லை. 'வேந்தன்' என்பதற்கு 'அரசன்' எனும் பொருளிலே இலக்கியங்களில் பதிவுகள் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் இந்திரன் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன.

'இந்திர விழவு' (ஐங்.62), 'இந்திரவிழவிற் பூவினன்ன' (ஐங்.62), 'வச்சிரத்தான்' (பரி.18), 'ஐயிருநூற்று மெய் நயனத்தவன்' (பரி.9), 'இடியேற்றை உடையவன்' (பரி.8), 'வானவில்லை வில்லாகக் கொண்டவன்' (பரி.28), 'ஏறு அதிர்க்கும் இந்திரன் இரும் உருமென' (பரி.8), 'ஆயிரங்கண்ணோன்' (கலி.105), 'வச்சிரத்தடக்கை நெடியோன்' (புறம்.241), 'இந்திரர் அமிழ்தம்' (புறம்), 'திருக்கிளர் செல்வன்' (திருமுருகு.159), 'யானையை ஊர்தியாக உடையவன்' (திருமுருக.159) என்ற பாடலடிகளில் இந்திரன் பற்றிய குறிப்பும், இந்திரவிழா விற்கான குறிப்புகளும் காணப்படுகின்றன.

**இரட்டை காப்பியங்களில் இந்திரனும் இந்திரவிழாவும்**

சிலப்பதிகாரக் காலகட்டத்தில் இந்திரன் சமய நிறுவனக் கடவுளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளான். சிலப்பதிகாரத்தில் இந்திரன் பற்றிய குறிப்பினை 'இந்திரவிழா ஊர் எடுத்த காதை'யில் இந்திரவிழாவின் போது வஜ்ராயுதம் உள்ள வச்சிரக்கோட்டம், அதற்கு செய்யப்படும் பூசை, விண்ணவர் தலைவன், ஆயிரங்கண்களை உடையவன், வச்சிரவேந்தன் என்று இந்திரனின் வழிபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காதையில் இந்திரனின் உருவஅமைப்பு, அவனது சிறப்புத்தன்மைகளைக் கூறாமல் மேலோட்டமாக இந்திரன் பற்றிய குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றது. பூம்புகார் நகரம் குறித்தும், இந்திரவிழாகாரணமாக மக்கள் செயல்பாடு குறித்த பதிவுகள் உள்ளன. இந்திரனுக்கு வந்த துயரை முசுகுந்த சக்கரவர்த்தி என்ற மன்னன் நீக்கியதன் காரணமாக அவனுக்கு இந்திரனால் பரிசளிக்கப்பட்ட ஐவகை மன்றங்களில் நாளங்காடி வழிபாட்டில் இந்திரன் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இந்திரனுக்குகென்று கொண்டாடப்படும் விழாவான இந்திரவிழா குறித்தும், அதற்கான காரணத்தை மணிமேகலையில் உள்ள பதிவுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. பூம்புகார் நகரை மேம்படுத்த எண்ணிய 'செம்பியன்' என்ற சோழமன்னன் அகத்தியரை வேண்ட, இந்திரனுக்கு விழா எடுத்து அதற்கு இந்திரனையே அழைக்குமாறு கூறுகிறார். சோழமன்னன் இந்திரவிழாக் கொண்டாடுகின்றான். அதனைத்தொடர்ந்து ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டதற்கான குறிப்புகள் காணப்படுகின்றது. இந்திரவிழா நடத்த மறந்த காரணத்தால் நகரமே வறிதாகிப்போனதற்கான குறிப்பினை 'பாத்திரம் பெற்றக் காதையில் தீவதிலகையின் வாயிலாக அறியலாம். நகரத்தின்

வளமைக்கு நீர் ஆதாரம் தேவை. எனவே நீர் கடவுளாகவும், வளமைக் கடவுளாகவும் இந்திரன் போற்றப்படுகின்றான்.

**தொன்ம உருவாக்கத்தில் இந்திரனின் தாழ்நிலை**

இந்திரன் சிறப்பு சங்க காலத்திலேயே குறையத் தொடங்கியது. வைதீகமதத்தின் எழுச்சியே இதற்கான காரணமாகக் கூறலாம். சங்க இலக்கியங்களில் பிற்கால இலக்கியமான திருமுருகாற்றுப்படை, பரிபாடலில் காண முடிகின்றது. மேலும் இராமாயண அகலிகை, கண்ணன் தொன்மக் கதைகளிலும் காணமுடிகின்றது.

திருமுருகாற்றுப்படையில் ‘வானோர் வணங்குவில் தானைத் தலைவா” (260) எனத் தேவர்கள் முருகனை வணங்குதலாக கூறுவது, பரிபாடலில் ‘ஐயிருநூற்று மெய் நயனத்தவன்” (19.9) என ஆயிரம் கண்களை உடம்பில் உடையவன் எனவும், இந்திரன் பூனைவடிவத்தில் தோன்றி செல்லுதல், அகலிகையிடம் காமவயப்படுதல், கண்ணன் தொன்மத்தில் மழை பொழிவிக்கச் செய்து ஆயர்களுக்கும், அவர்களின் விலங்குகளுக்கும் துன்பத்தை ஏற்படுத்துதல் போன்றவை இந்திரனின் தாழ்நிலை தொன்ம உருவாக்கத்தைக் காட்டுகின்றது. வடபுலத்தொன்மங்களின் கலப்பு காரணமாக முருகன், திருமால் போன்ற தெய்வங்கள் உயர்தலும், இந்திரன் போன்ற தெய்வங்களின் வீழ்ச்சி சமூக சமய அரசியல் மாற்றங்களின் பின்னணியில் ஏற்படுவது இயல்பு. அந்த வகையில் இந்திரனின் தொன்மம் அமையும்.

**முடிவுரை**

இந்திரன் பற்றிய தொன்மம் மக்களையொட்டி அமைந்துள்ளது. தொன்மைக் கடவுளான இந்திரன் வேதகாலத்தில் போர்கடவுளாகவும், பௌத்தமதத்தில் வஜ்ரபாணி என்னும் கடவுளாக இனங்காணப்படுகின்றான். சங்க காலத்தில் இந்திரன் பற்றிய குறிப்பு ஒரு சீரற்ற தன்மையில் விளங்கும் சமயத்தில் சமூக, சமய மாற்றங்களால், வைதீக மதத்தின் எழுச்சியால் தலைமைக் கடவுள் நிலையிலிருந்து தாழ்ந்து பெயரளவில் காணப்படுகின்றான். பிற்கால இலக்கியங்களில் தாழ்ந்த நிலை அடைந்துள்ளான். காப்பிய காலகட்டத்தில் இந்திரனுக்கு விழா எடுத்து சிறப்பித்தல் என்பது இந்திரன் ஒரு வளமைக் குறியீடாகவும், அவனை வணங்கினால் வளமை ஏற்படும் என்பதாலாகும்.

**பார்வை நூல்கள்**

1. ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை, சிலப்பதிகாரம், மணிமேகலை
2. ஜம்புநாதன் (தமிழ் மொழி பெயர்ப்பு), ரிக்வேதம்
3. டி.டி. கோசாம்பி, பண்டைய இந்தியா
4. ராகுல் சாங்கிருத்தியாயன், ரிக்வேதகால ஆரியர்கள்
5. கதிர். மகாதேவன், தொன்மம்
6. க.பஞ்சாங்கம், தொன்மத் திறனாய்வு